**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.86** **நாள் : 25.05.2024**

**தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழையினை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை இன்று (25.05.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழையினை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை இன்று (25.05.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள்**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-133க்குட்பட்ட டாக்டர் நாயர் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களில் ரூ.4.80 இலட்சம் மதிப்பில் 480 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் **வண்டல்கள்** தூர்வாரும் பணியினையும், வார்டு-132க்குட்பட்ட சுப்ரமணியன் நகரில் உள்ள மழைநீர் வடிகாலில் ரூ.1.20 இலட்சம் மதிப்பில் 685 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் **வண்டல்கள்** தூர்வாரும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அகற்றப்படும் வண்டல்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தி அவ்விடத்தை **தூய்மையாக** வைத்துக் கொள்ளவும், தூர்வாரும் பணியினை பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, **ஆலந்தூர்** மண்டலம், நங்கநல்லூர் முதல் பிரதான சாலை, கோவளம் வடிநிலப் பகுதியில் ரூ.58.97 கோடி மதிப்பில் 11.723 கி.மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பருவமழைக்கு முன்னதாக பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, பெருங்குடி மண்டலம், வேளச்சேரி பிரதான சாலையில் அணை ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு உபரிநீர் வெளியேறுவதற்காக நீர்வள ஆதாரத் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறையின் சார்பில் ரூ.57.70 கோடி மதிப்பில் பள்ளிக்கரணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளையும், பழைய மஹாபலிபுரம் சாலை, ஒக்கியம் மடுவு பகுதியில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

நிதியின் கீழ், ரூ.25 கோடி மதிப்பில் ஒக்கியம் மடுவு கால்வாயினை மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.615 கோடி மதிப்பில் கொட்டிவாக்கம், பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம் மற்றும் நீலாங்கரை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணியினை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் கடற்கரையில் தூய்மைப் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கடற்கரை தூய்மைப்படுத்தும் பணியினை **தலைமைச் செயலாளர் அவர்கள்** பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தூய்மைப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

**இந்த ஆய்வுகளின் போது, தலைமைச் செயலாளர் அவர்கள் நடைபெற்று வரும் பணிகளை துரிதமாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளவும், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அவ்வப்போதைய தகவல்களின் அடிப்படையில்** தேவையான முன்னெச்சரிக்கை **பணிகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.**

இந்த ஆய்வுகளின்போது, கூடுதல் தலைமைச் செயலர்/**பெருநகர சென்னை மாநகராட்சி** ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., **நெடுஞ்சாலைத்துறை மற்றும்** நீர்வள ஆதாரத்துறை (பொ) கூடுதல் தலைமைச் செயலர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் (பொ) திரு.பி. செந்தில்குமார், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய மேலாண்மை இயக்குனர் திரு.டி. ஜி. வினய், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., **கூடுதல் ஆணையாளர்** (சுகாதாரம்) **திரு.வி.ஜெய சந்திர பானு ரெட்டி**, இ.ஆ.ப., இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி. அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), தலைமைப் பொறியாளர் திரு.எஸ். ராஜேந்திரன் (பொது) உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**